அம்பத்தூர்—செங்குன்றம் நெடுஞ்சாலை சீரமைப்புப் பணி.

*வினா எண். 311—திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூரிலிருந்து செங்குன்றம் செல்லும் நெடுஞ் சாலை (Redhills) பழுதடைந்து உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இதனை சீரமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) ஆம்.

Improvements to Nagapattinam Bus Stand.

*Q. No. 312—Thiru R. UMANATH : Will the Hon. the Minister for Local Administ a ion be pleosed tc s.a e :

(a) whether this Govetnment has received any request fiom the Nagapa inam Municipality to improve the exis ing bus stand with more facilities and

(b) if so, the details there of?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ஒருங்கிணைந்த நகர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம் நகராட்சி பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றவும் தற்போது பேருந்து நிலையம் இருக்கும் இடத்தில் தரைதளத்தில் நாளங்காடியும் முதல் தளத்தில் ஓய்வு அறைகளும் மற்றும் இரண்டாம் தளத்தில் அலுவலக அறைகள் கட்டவும் உத்தேசித்துள்ளது.

திரு. எம். செல்லமுத்து : நாகை நகராட்சி பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்ற இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது இருக்கும் அந்த இடம் மிகவும் நெருக்கடியானது. அதை உடனடியாக வேறு இடத்திற்கு மாற்ற அரசு நிதி உதவி செய்து விரைவாக முடிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அவை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தற்போது இருக்கக்கூடிய நிலையில் 5,345 சதுர அடியில் இந்த பேருந்து நிலையம் இருக்கிறது. வெள்ளிப் பாளையம் கிராமத்திற்குப் போகிற பகுதியில் இந்தப் பேருந்து நிலையத்தை மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.